# “ நீ உனக்குச் சொந்தமல்லவே”

இயற்றியவர் – தே.தேவசகாயம்

ரோமர் 14 : 8 ‘‘நாம் கர்த்தருடையவர்கள்’’

We are Lord’s

கவிஞர். தே.தேவசகாயம் சாட்சியாபுரத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மேசியாதாஸ், தேவநேசன் என்று இரு குமாரர்கள் உண்டு. ஒரு நாள் பள்ளிக்கு புறப்படும் பொழுது ஏதோ ஒரு பொருளை சொந்தம் கொண்டாடி ‘‘இது என்னுடையது, உன்னுடையதல்ல’’ என்று கூச்சலிட்டு சண்டை போட்டனர். அவர்களைச் சமாதானப்படுத்த முயன்ற போது பவுலடியாரின் வேத அறிவுரை நினைவில் வந்தது.

உள்ளக் கிளர்ச்சி பெற்ற கவிஞர் தே.தேவசகாயம் இந்த பாடலின் முதல்வரியை, நீ உனக்கு சொந்தமல்லவே, தாசா, நேசா என்பதாக பாடினார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவன் இயேசுவின் விலையேறப்பெற்ற ரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்ட அடிமை எனவே தனக்கென்று எதையும் உரிமை பாராட்டத்தகுதியற்றவன்.

தன் பிள்ளைகளுக்கென எழுதிய இந்த பாடல் ‘‘தாசா … நேசா’’ நீக்கப்பட்டு மீட்கப்பட்ட பாவி என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன.

புதிய இரட்சிப்பின் அனுபவம் பெற்றபின் பழைய வாழ்க்கைக்கு திரும்பலாகாது என்ற கருத்தினை அழகாக தெளிவாக எழுதியிருக்கிறார். இது தான் நிலையான கிறிஸ்தவ நம்பிக்கை.

அன்பின் அழைப்புப் பாடலான ‘‘வா, பாவி, மலைத்து நில்லாதே வா’’ நம்பிக்கையூட்டும் பாடலான ‘‘அடைக்கலம் அடைக்கலமே’’ ஆகிய பாடல்களையும் கவிஞர். தே.தேவசகாயம் இயற்றினார். இவரை ‘‘தேவசகாயம் உபாத்தியாயர்’’ என்றும் அழைப்பார்கள்.

**திருமதி.சில்வியா**